सत्यमेव जयते

# பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (PMMSY)
# குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

*மீனவர் & மீன்பிடித்தொழில் சார்ந்தவர்களுக்காக*



**தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், மீன்வளத்துறை,**
**மீன் வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம்,**
**இந்திய அரசு**

www.nfdb.gov.in nfdbindia nfdbindia nfdbindia pmmsygais@gmail.com 1800-425-1660

**முன்னுரை**

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (PMMSY) பயனாளி சார்ந்த திட்டங்களில் ஒரு பிரிவான குழு விபத்துக்காப்புறுதி திட்டம் (GAIS) மீனவர்களின் குழு விபத்து காப்புறுதிக்கான மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் மட்டுமே செயல்படுத்தப்படும் திட்டமாகும். PMMSY-திட்டத்தின் கீழான மீனவர் குழு காப்புறுதி திட்டத்தினை(GAIS) தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது.*

**வயது வரம்பு**

*18 வயது முதல் 70 வயது வரையிலான மீனவர்கள் மற்றும் மீன்பிடி தொழில் சார்ந்தவர்கள் இக்காப்புறுதி திட்டத்திற்கு தகுதியானவர்கள்.*



**பயனடைய தகுதியானோர்**

*மீன்பிடிக்கும் தொழில்செய்யும் ஆண்கள், பெண்கள், மீன்பிடி தொழிலாளர்கள், மீன் வளர்ப்போர், மீன்பிடி தொழில் சார்ந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள அனைவரும்*

**சேவை வழங்குபவர்கள்**

*காப்பீட்டு நிறுவனம் : ஓரியண்டல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (OICL)*

*காப்பீட்டு இடைத்தரகர் : புரோவிடென்ஸ் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் புரோக்கிங் பிரைவேட் லிமிடெட்*

**காப்புறுதி திட்டங்கள் & காப்புறுதி தொகை**

| திட்டங்கள் | விவரம் | காப்புறுதி தொகை | பிரிமியம் |
|---|---|---|---|
| திட்டம் – 1 | குரூப் ஜனதா விபத்து காப்புறுதி திட்டம் (GJPA) இறப்பு மற்றும் நிரந்தர முழு உடல் ஊனத்திற்கு | ரூ. 5 இலட்சம் | ரூ. 91.00/- (GST கிடையாது) |
| திட்டம் –2 | சிறப்புத் தற்செயல் (SCP) காப்புறுதி திட்டம் பகுதி ஊனத்திற்கு (PPD) மற்றும் மருத்துவச் செலவுகளுக்கு | நிலையான பகுதி ஊனத்திற்கு (PPD) ரூ. 2,50,000/– மருத்துவச் செலவுகளுக்கு ரூ. 25,000/– | ரூ. 4.00/– (GST உட்பட) |
| | | மொத்தம் | ரூ. 95.00 |

**காப்புறுதி சந்தா கட்டணம் செலுத்தும் முறை**

- *ஒரு மீனவருக்கு ஓர் ஆண்டுக்கான காப்புறுதி சந்தா கட்டணம் ரூ.95*
- *60:40 மத்திய அரசு & மாநிலங்களுக்கிடையேயான விகிதம் (ரூ.57, ரூ.38 )*
- *90:10 மத்திய அரசு & வடகிழக்கு மற்றும் இமயமலை சார்ந்த மாநிலங்களுக்கிடையேயான விகிதம் (ரூ.85.5, ரூ. 9.5)*
- *100% யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய அரசின் மொத்த பங்களிப்பு – ரூ.95*
- *பயனாளிகளின் (மீனவர்கள்) பங்களிப்புக் கிடையாது.*
- *காப்புறுதி நிறுவனத்திற்குக் காப்புறுதி சார்ந்த கட்டணம் செலுத்தும் தேதியிலிருந்து காப்புறுதி வரையறை காலம் தொடங்கும்.*

**காப்புறுதி சேவை மையம் (Insurance Cell)**

*மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதை உறுதிப்படுத்த தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தில் காப்புறுதி சேவை மையம் (Insurance Cell) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய அலுவலர்கள், காப்புறுதி நிறுவனம் மற்றும் இடைத்தரகு நிறுவனப் பிரதிநிதிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாநில / யூனியன் பிரதேச மீன்வளத்துறை, காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தை ஒருங்கிணைப்பது மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொண்டு காப்புறுதி தொகையை உரிய காலத்தில் பெற்றுத்தருவது காப்புறுதி சேவை மையத்தின் பணிகளாகும். மேலும் தகவல்களுக்கு என்ற pmmsygais@gmail.com மின்னஞ்சல் முகவரி மூலமும் தொடர்பு கொள்ளலாம்.*

### காப்புறுதி தொகை பெறுவதற்கு தகுதி தொடர்பான விவரங்கள்

- கடல் / சாலை / தொடர்வண்டி, சார்ந்த விபத்துகள்
- நீரில் மூழ்குதல், நீர்நிலைகளில் காணாமல் போதல்
- தீவிபத்து, விஷப் பொருட்களைக் கையாளும்போது ஏற்படும் விபத்துகள்
- மின்னல் மற்றும் மின் அதிர்ச்சியால் ஏற்படும் விபத்துகள்
- இயந்திரங்களை கையாளும் போது ஏற்படும் விபத்து
- கொலை
- உயரத்திலிருந்து கீழே விழுந்து அடிபடுதல் அல்லது இறத்தல்
- கலவரங்கள்
- பாம்பு கொத்துதல் / தேள் கொட்டுதல் / விலங்குகள் கடித்தல் / நாய்க்கடி / விலங்குகளால் தாக்கப்பட்டு இறத்தல் அல்லது கைகால்களை இழத்தல்
- மற்ற விபத்துகள்



### காப்புறுதி தொகை கோரத் தகுதியற்றவை

- தற்கொலை அல்லது தற்கொலை முயற்சி
- சுயமாக ஏற்படுத்திக்கொண்ட காயம்
- கருச்சிதைவு
- ஏற்கெனவே உள்ள உடல் ரீதியான மன ரீதியான பாதிப்புகள், நோய்கள்
- மது, போதைப் பொருள்களைப் பயன்படுத்தியதால் ஏற்படும் பாதிப்புகள்
- காப்புறுதி செய்யபட்டவர் சட்ட விதிகளுக்குப் புறம்பாகத் தீய நோக்கத்தில் காப்புறுதி தொகை எதிர்நோக்கி செயல்படுதல்
- வாரிசு அல்லது பயனாளியால் கொலை செய்யப்படுதல்
- இயற்கை மரணம்

### காப்புறுதி தொகையை பெற எப்படித் தகவல் அளிக்க வேண்டும்?

- NFDB காப்புறுதி சேவை மையம் / காப்புறுதி நிறுவனம் / இடைத்தரகர் ஆகியோருக்குக் கடிதம் மூலம் தெரிவித்தல் (RPAD கடிதம் வாயிலாக தகவல் அளித்திருந்தால் அஞ்சலில் அனுப்பிய நாள் மற்றும் வேறு வகையில் கடிதம் அனுப்பியிருந்தால் பெறப்பட்ட நாள்)
- NFDB காப்புறுதி சேவை மையத்திற்கு மின்னஞ்சல் வாயிலாகத் தெரிவித்தல். மின்னஞ்சல் முகவரி : **pmmsygais@gmail.com**
- NFDB யின் கட்டணமில்லாத் தொலைபேசி (1800-425-1660) வாயிலாகத் தகவல் தெரிவித்தல்

### நிர்ணயிக்கப்பட்ட காலங்கள்

- விபத்து ஏற்பட்ட120நாட்களுக்குள் காப்புறுதி நிறுவனத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.
- விபத்து ஏற்பட்ட 180 நாட்களுக்குள் காப்புறுதி கோரும் முன்மொழிவுடன் உரிய ஆவணங்கள் காப்புறுதி நிறுவனத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- *காப்புறுதி சேவை மையமானது காப்புறுதி தொகை கோரும் விவரங்களைக் காப்புறும் நிறுவனத்திற்கு 3 வேலை நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.*
- *மாநில / மாவட்ட மீன்வள அதிகாரிகள், உரிமை கோரி பெறப்பட்ட விபரங்களைக் காப்புறுதி நிறுவனத்திற்கு ஏழு வேலை நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.*
- மாநில / மாவட்ட மீன்வளத்துறை அலுவலர்கள் காப்புறுதி கோரும் முன்மொழிவுடன் உரிய ஆவணங்கள், முறையாகப் பரிசீலித்து உரிய கடிதத்துடன் 7 வேலை நாட்களுக்குள் காப்புறுதி சேவை மையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் இதற்கான தகவல்கள் MISஇல் பதிவேற்றம் செய்யப்பட்டாலும், நேரிலோ அல்லது கடிதம் வாயிலாகவோ அனுப்பி வைத்தல் அவசியமாகும்

● காப்புறுதி தொகை கோருதல் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் முழுமையாகப் பெற்றுக்கொண்ட 15 வேலை நாட்களுக்குள் M/s. OICL நிறுவனமானது உரிய காப்புறுதி தொகையினை சம்பந்தப்பட்ட வங்கி கணக்கில் இருத்தல் செய்யும்.

**காப்புறுதி தொகை கோருவதற்குத் தேவையான ஆவணங்களின் சரிபார்ப்புப் பட்டியல்**

1. காப்புறுதி தொகை உரிமை கோரும் முதல் தகவல் படிவம் – அசல்
2. உரிமை கோருபவர் / காப்புறுதி பெற்றவர் கையெழுத்திட்டு முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட காப்புறுதி தொகை கோரும் படிவம் – அசல்
3. காவல்துறை முதல் தகவல் அறிக்கையின் (FIR) சான்றிட்ட நகல்
4. நடுவர் தீர்ப்பின் சான்றிட்ட நகல் (தல நடுவர் தீர்ப்பு / விசாரணை நடுவர் தீர்ப்பு)
5. மருத்துவதுறையின் பிரேதப் பரிசோதனை அறிக்கையின் (PME) சான்றிட்ட நகல்
6. மாநில மீன்வளத்துறையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட மீன்வள அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைக் கடிதம்
7. இறப்புச் சான்றிதழ் – அசல்
8. குடும்ப உறுப்பினர்கள் சான்றிதழ் (சட்டபூர்வ வாரிசுச் சான்றிதழ்) – அசல்
9. செய்தித்தாளில் வெளிவந்த தகவல்கள் (எவையாவது இருப்பின்)
10. மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ் / இறப்பு அறிக்கை
11. தொடர்புடைய வங்கி அலுவலரால் முறையாகக் கையொப்பமிட்ட தேசிய மின்னணுத் தொகைப் பரிமாற்ற (NEFT) வங்கிக் கணக்கு விவரம் அடங்கிய படிவம் - அசல்.
12. ஒரு ரூபாய் வருவாய் அஞ்சல் தலை (Revenue Stamp) ஒட்டப்பட்ட காப்புறுதி தொகை கோருபவரின் விடுவிப்புப் பற்றுச்சீட்டு
13. நீரில் மூழ்கியிருப்பின் அது தொடர்பான இரண்டு சாட்சிகளின் அறிக்கை
14. விஷப் பொருட்களைக் கையாளுதல், மூழ்குதல் போன்ற சில விபத்துகளுக்கான FSL (தடய அறிவியல் ஆய்வக) அறிக்கை / இரசாயனக் கூராய்வு அறிக்கை
15. செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் (வாகனத்தை ஓட்டும்போது ஏற்படும் விபத்துக்கு)
16. காவல்துறையினரிடமிருந்து பெறப்பட்ட இறுதி விசாரணை அறிக்கை (FIR)
17. ஆதார் கார்டு நகல் / வாக்காளர் அடையாள அட்டை நகல் / ரேசன் கார்டு – முகவரிச் சான்றுக்காக
18. மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்றிதழ் / மீன்பிடி உரிமம்
19. காப் பீட் டுத் தொகை கோருபவரின் பான் கார் டு ( PAN Card) நகல்.
20. உறுதிமொழி ஆவணம் / தடையில்லாச் சான்றிதழ் (ஒருவருக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு)
21. காணாமல் போனதற்கான இழப்பீட்டுப் பத்திரம்
22. நீரில் மூழ்குதல் மற்றும் வழக்கத்துக்கு மாறான இறப்புக்கான ஆதாரம்




**தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்**
**மீன் கட்டடம், தூண் எண். 235, P.V. நரசிம்ம ராவ் அதிவேக சாலை, SVPNPA, அஞ்சல்,**
**ஹைதராபாத், தெலங்கானா 500 052**

*NFDBஇன் கட்டணமில்லா தொலைபேசி எண். (1800-425-1660)*
*மின்னஞ்சல் : pmmsygais@gmail.com*